**2019ஆம் ஆண்டு ஜுன் மாதம் 28 ஆம் தேதி வெள்ளிக் கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற விருத்தாசலம் நகர்மன்றத்தின் சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை :**
**திரு. க. பாலு,**
**தனி அதிகாரி,**
**விருத்தாசலம் நகராட்சி.**

<u>பொருள் எண். 1.</u>

விருத்தாசலம் நகராட்சி ஆணையர் வாகனம் ஈப்பு எண். TN-31-AQ-6363 வாகனத்தின் 5 டயர்களும் தேய்ந்துவிட்டதால், டயர் கிழிந்து விபத்து ஏற்படும் நிலையில் உள்ளதால் மாவட்ட ஆட்சியர், கடலூர் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், செங்கல்பட்டு அவர்களின் ஆய்வு கூட்டத்தில் கலந்து கொள்ளாத நிலை உள்ளதால், மேற்படி வாகனத்தின் 5 டயர்களும் (Tubless) புதியதாக வாங்கி தரக்கோரி ஓட்டுனர் குறிப்பு வழங்கியுள்ளார். எனவே ஓட்டுனர் அளித்துள்ள குறிப்பின்படி மேற்படி வாகனத்திற்கு 5 எண்ணிக்கை Tubless டயர் வாங்கும் பணிக்கு ஏற்படும் தோராய செலவினம் ரூ. 40000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
   (ந.க.எண். 3000/19/இ1)

**தீர்மானம் எண். 3447 நாள். 28.06.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 2.</u>

விருத்தாசலம் நகராட்சி ஆணையர் வாகனம் ஈப்பு எண். TN-31-AQ-6363 வாகனத்தின் டிங்கரிங், பெயிண்டிங், முன்பக்க கண்ணாடி மற்றும் சீட் கவர் மாற்றி அமைக்க வேண்டும் என ஓட்டுனர் குறிப்பு வழங்கியுள்ளார். எனவே ஓட்டுனர் அளித்துள்ள குறிப்பின்படி மேற்படி வாகனத்திற்கு பணிகள் செய்ய ஏற்படும் தோராய செலவினம் ரூ. 65000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
   (ந.க.எண். 2809/19/இ1)

**தீர்மானம் எண். 3448 நாள். 28.06.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 3.</u>**

விருத்தாசலம் நகராட்சி ஆணையர் வாகனம் ஈப்பு எண். TN-31-AQ-6363 வாகனத்திற்கு அரசு சின்னம் முன்பக்கம் மற்றும் பின்பக்கம் பொருத்த பூம்புகார் விற்பனை நிலையத்தில் வாங்கியதற்கான தொகை ரூ. 6380/— தன்னால் செலுத்தப்பட்டதை வழங்ககோரி திரு. ஆர். ராஜி, ஓட்டுனர் அவர்கள் பட்டியல் சமர்பித்துள்ளார். எனவே தமிழ்நாடு அரசு சின்னம் இரண்டு வாங்கியதற்கான பட்டியல் தொகை ரூ. 6380/— திரு. ஆர். ராஜி, ஓட்டுனர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
   (ந.க.எண். 2808/19/இ1)

**தீர்மானம் எண். 3449 நாள். 28.06.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 4.</u>**

விருத்தாசலம் நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்கள் வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்றவர்கள் மற்றும் இறந்த பணியாளர்களின் வாரிசுகள் சிறப்பு சேமநலநிதி வேண்டி விண்ணப்பிப்பவர்களுக்கு 2019—20 ஆண்டுக்கான சிறப்பு சேமநலநிதி வட்டி மற்றும் அரசு பங்குத் தொகை ஆகியவை 2019—20ஆம் ஆண்டில் வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 4019/18/பி3)

**தீர்மானம் எண். 3450 நாள். 28.06.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 4.</u>**

இந்நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு 2018—19 ஆம் ஆண்டிற்கு தேவைப்படும் பதிவேடுகள் மற்றும் படிவங்கள் ஆகியவை வாங்குவதற்கு நகர் மன்றம் தீர்மானம் எண். 2954, நாள். 20.04.2018ல் ரூ. 3,00,000/— அனுமதியளித்துள்ளது. அதன்படி தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்ட்கோ சர்வ் நிறுவனத்திலிருந்து பதிவேடுகள் மற்றும் படிவங்கள் ஆகியவை வாங்கப்பட்டதால் அதற்குண்டான பட்டியல் ரூ. 3,20,214/— க்கு வரப்பெற்றுள்ளது. எனவே கூடுதலாக உள்ள செலவினம் ரூ. 20,214/—க்கு சம்மந்தப்பட்ட நிறுவனத்திற்கு வழங்கிட மன்றப்பொருள் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத் தொகை ரூ. 20214/—ஐ பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3451 நாள். 28.06.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 5.</u>**

விருத்தாசலம் நகராட்சிக்கு சொந்தமான வயலூர் உரக்கிடங்கில் ரூ. 425.00 இலட்சம் மதிப்பில் கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் (FSTP) அமைக்கும் பணிக்கு பணி உத்தரவு வழங்கி பணி நடைபெற்று வரும் நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், செங்கல்பட்டு அவர்களின் ஆய்வு கூட்டத்தில் மேற்படி பணிக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் Consent to Establish சான்றிதழ் பெற்று பணி மே கொள்ள தெரிவித்ததற்கிணங்க, மேற்படி Consent to Establish சான்று பெறுவதற்கு ஆன்லைனில் பதிவு செய்து பதிவு கட்டணமாக ரூ. 43,600/– வங்கி வரைவோலையாக "DEE, TNPCB, Cuddalore" என்ற முகவரிக்கு செலுத்த வேண்டு ம் என தெரிவிக்கப்பட்டதற்கிணங்க மேற்படி தொகை ரூ. 43,600/– வங்கி வரைவோலையாக தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு செலுத்த மன்றத்தி அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.
3. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட தொகை செலுத்தியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
   (ந.க.எண். 3085/2018/இ1)

**தீர்மானம் எண். 3452 நாள். 28.06.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 6.</u>**

விருத்தாசலம் நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் 2018–19ன் கீழ் ரூ. 425.00 இலட்சம் மதிப்பில் வயலூர் உரக்கிடங்கில் 40KLD கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் (FSTP) அமைக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், செங்கல்பட்டு அவர்களின் ஆய்வு கூட்டத்தில் பணியின் அவசரம் அவசியம் கருதி உடன் திட்ட மதிப்பீடு தயார் செய்து சமர்பித்து நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெறப்படவேண்டும் என தெரிவிக்கப்பட்டதற்கிணங்க, பணியி அவசரம் அவசியம் கருதி 5 எண்ணிக்கை திட்ட மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரி பணி ஆணை வழங்கப்பட்டு பணி தற்போது நடைபெற்று வருகிறது. எனவே திட்ட மதிப்பீடு 5 எண்ணிக்கை தயார் செய்ததற்கான தொகை ரூ. 81,032/– தன்னால் செலவு செய்யப்பட்டதை வழங்க கோரி திரு. சி.பாண்டு, நகராட்சி பொறியாளர், விருத்தாசலம் நகராட்சி அவர்கள் கடிதம் அளித்துள்ளார். எனவே திட்ட மதிப்பீடு தயார் செய்ததற்கான தொகை ரூ. 81,032/– ஐ திரு. சி. பாண்டு, நகராட்சி பொறியாளர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.
   (ந.க.எண். 3085/2018/இ1)

**தீர்மானம் எண். 3453 நாள். 28.06.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7.**

விருத்தாசலம் நகராட்சியில் IDMISST திட்டத்தின் கீழ் ரூ. 429.20 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி பகுதியில் 12500 புதிய குடிநீர் இணைப்புகள் (Internal Pluming) அமைக்கும் பணி, தூய்மை இந்தியா திட்டம் 2018–19ன் கீழ் ரூ. 103.00 இலட்சம் மதிப்பீட்டில் வயலூர் உரக்கிடங்கி சேகரிக்கப்பட்டுள்ள குப்பைகளை மறுசுழற்சி (Bio-Mining) செய்யும் பணி Machinary Shed மற்றும் ரூ. 48.60 இலட்சம் மதிப்பீட்டில் 4 எண்ணிக்கை Light Commercial Vehicles மற்றும் 27 எண்ணிக்கை Baterry Operated Vehicle சப்ளை செய்யும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், செங்கல்பட்டு அவர்களின் ஆய்வு கூட்டத்தில் பணியின் அவசரம் அவசியம் கருதி உடன் திட்ட மதிப்பீடு தயார் செய்து சமர்பித்து நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெறப்படவேண்டும் என தெரிவிக்கப்பட்டதற்கிணங்க, பணியின் அவசரம் அவசியம் கருதி 5 எண்ணிக்கை திட்ட மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரி பணி ஆணை வழங்கப்பட்டு பணி தற்போது நடைபெற்று வருகிறது. எனவே திட்ட மதிப்பீடு 5 எண்ணிக்கை தயார் செய்ததற்கான தொகை ரூ. 28,000/– தன்னால் செலவு செய்யப்பட்டதை வழங்க கோரி திரு. சி.பாண்டு, நகராட்சி பொறியாளர், விருத்தாசலம் நகராட்சி அவர்கள் கடிதம் அளித்துள்ளார். எனவே திட்ட மதிப்பீடு தயார் செய்ததற்கான தொகை ரூ. 28,000/– ஐ திரு. சி. பாண்டு, நகராட்சி பொறியாளர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.
   (ந.க.எண். 3885/2018/இ1)

**தீர்மானம் எண். 3454 நாள். 28.06.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8.**

விருத்தாசலம் நகராட்சி பகுதிகளில் அனுமதியில்லாமல் அமைக்கப்பட்டு 20.10.16க்கு முன் முழுவதும் விற்கப்பட்ட அனுமதியற்ற மனை பிரிவுகளை அரசாணை எண். 78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை, நாள். 04.05.2017, அரசாணை எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை, நாள். 13.10.2017 மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 13193/2017/எல் ஏ1, நாள். 27.03.2018ன்படி Sold plot frame work அனுமதி நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர் அவர்களால் கீழ்கண்ட மனைப்பிரிவுகளின் சாலைகளை பொது உபயோகங்களுக்காக நகர் மன்றம் உரிய தீர்மானம் இயற்றி எடுத்துக்கொண்டு அதன் பிறகு விற்கப்பட்ட தனி மனைகளை வரன்முறை செய்யவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் சாலைகளை எடுத்துக்கொள்ள மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

விபரம் கீழ்வருமாறு:

| வ.எண். | மனைபிரிவின் பெயர் | கிராமத்தின் பெயர் மற்றும் சர்வே எண் | நகர் ஊரமைப்பு அனுமதி உத்தரவு எண் மற்றும் நாள். |
|---|---|---|---|
| 1. | பெயரிடப்படாத நகர் 65/1 D2,2,3. | கண்டியங்குப்பம் R.S.No. 65/1 D2,2,3. Ward D, Block-2 | SPF No. 50 விருத்தாசலம் (m.p) /2018 நாள். 29.03.2019. |
| 2. | ஜெய் நகர் ம றும் ஜெய் நகர் விரிவாக்கம். | பூதாமூர் R.S.No. 49/4B,4C5. Ward F, Block-32 | SPF No. 53 விருத்தாசலம் (m.p) /2018 நாள். 12.04.2019. |
| 3. | கந்தசாமி நகர். | மணலூர் R.S.No. 24/1,24/1, 24/5,24/6,25/1 Ward B Block-1 | SPF No. 55 விருத்தாசலம் (m.p) /2018 நாள். 17.05.2019. |
| 4. | கிரீன் சிட்டி டவர்ஸ். | விருத்தாசலம் R.S.No. 212/4,214/2pt Ward E Block-70 | SPF No. 56 விருத்தாசலம் (m.p) /2018 நாள். 03.06.2019. |
| 5. | காவேரி நகர் | விருத்தாசலம் R.S.No. 126/2,126/4 Ward D | SPF No. 57 விருத்தாசலம் (m.p) /2018 நாள். 18.06.2019. |
| 6. | வி.ஜ.பி நகர் | விருத்தாசலம் R.S.No. 296/1B,2,4B.298/3,299/5A, 5B,5C,6,4 Ward E Block-116 | SPF No. 45 விருத்தாசலம் (m.p) /2018 நாள். 28.06.2019. |

மேற்கண்ட பொது சாலைகளை ஊள்ளாட்சி சாலையாக மன்றம் அங்கீகரிக்கலாம்.

**அலுவலக குறிப்பு :**

நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர் அவர்களின் உத்தரவில் தெரிவிக்கப்பட்டதற்கிணங்கவும், அரசாணைகளில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கிணங்கவும் மேற்படி மனை பிரிவில் அமையும் சாலைகளை பொது சாலையாக ஏற்று அறிவிக்கலாம்.

(ந.க.எண். 2349/17/எப்1)

**தீர்மானம் எண். 3455 நாள். 28.06.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9.**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட மணலூர் கிராமம் ரீ. சர்வே எண்கள் 14/1,14/4,14/8,14/9, (TS NO 14/1,14/4) ல் 6.02 ஏக்கர் மற்றும் ரீ.சர்வே எண்கள் 16 பகுதி,31/1,32/4 (T.S. NO 16/6பி,16/7பி,32/1,31/2ஏ2) 1.84 ஏக்கரில் அமைக்கப்பட்டுள்ள "சுவர்ணபூமி மற்றும் ஸ்ரீ அழகன் நகர்" எனும் அனுதியற்ற மனைப்பிரிவுகளுக்கு அரசாணை எண். 78, வீட்டுவசதி மற்றும் நகர்புற .வளர்ச்சிதுறை (UD(3) துறை, நாள். 04.05.2017 மற்றும் அரசாணை எண். 172, வீட்டு வசதி மற்றும்/. நகர்புற வளர்ச்சி துறை (UD(3) துறை, நாள். 13.10.2017 மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை–2அவர்களின் செயல்முறை வழிகாட்டுதல் (Operational Guideliness) ந.க.எண். 13193/2017/எல்.ஏ2, நாள். 30.10.2017, 31.10.2017 மற்றும் 07.11.2017ன்படி நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர், விழுப்புரம் மண்டலம் அவர்கள் கொ.ஒ.ம.வ/ந.ஊ.உ.இ (வி.ம) எண். 230/2019 என எண்ணிட்டு நாள். 06.03.2019ல் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியுள்ளார்கள். இதனை தொடர்ந்து மனைபிரிவு உரிமையாளர்களான திரு. N. ராஜாந்தம், G. கலியரஜ் மற்றும் மகாலட்சுமி ஆகியோர் மேற்படி மனைபிரிவில் ஒதுக்கப்பட்ட பூங்கா –I (9597.15 ச.அடி) பூங்கா –II (8661.62 ச.அடி) மற்றும் சாலைகள் ஆகிய பொது உபயோக இடங்களை தானபத்திர எண். 1170, நாள். 15.04.2019 மற்றும் தானப்பத்திர எண். 1884, நாள். 18.06.2019 ன் மூலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து ஒப்படைப்பு செய்துள்ளார். எனவே மேற்படி அனுமதியற்ற மனைப்பிரிவில் அமையும் பொது உபயோக இடங்களை ஏற்று மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு:**

பூங்கா மற்றும் பொது உபயோக இடங்களை மனுதாரர் தானபத்திரத்தின் மூலம் பதிவு செய்து ஒப்படைப்பு செய்துள்ளதால் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண். 1696/2019/எப்1)

**தீர்மானம் எண். 3456 நாள். 28.06.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 10.**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட விருத்தாசலம் கிராமம் வார்டு –E, பிளாக் எண். 116 புதிய நகரளவை எண், 7/8A, பழைய ரீ. சர்வே எண்கள் 311/8,311/11 ஆகியவற்றில் 1.97 ஏக்கர் அல்லது 85813.20 சதுரஅடி பரப்பளவில் அமைந்துள்ள "தில்லை நகர்" எனும் அனுமதிற்ற மனைப்பிரிவிற்கு அரசாணை எண். 78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை (UD(3) துறை, நாள். 04.05.2017 மற்றும் அரசாணை எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை (UD(3) துறை, நாள். 13.10.2017 மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை–2அவர்களின் செயல்முறை வழிகாட்டுதல் (Operational Guideliness) ந.க.எண். 13193/2017/எல்.ஏ2, நாள். 30.10.2017, 31.10.2017 மற்றும் 07.11.2017ன்படி மேற்படி மனைபிரிவிற்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர், விழுப்புரம் மண்டலம் அவர்கள் கொ.ஒ.ம.வ/ந.ஊ.உ.இ (வி.ம) எண். R1374/2018 என எண்ணிட்டு நாள். 04.12.2018ல் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மனைபிரிவு உரிமையாளரான திரு. B. மகாராஜன் த/பெ பால்ராஜ் அவர்கள் மேற்படி மனைபிரிவில் ஒதுக்கப்பட்ட பூங்கா –I (2892.50 ச.அடி) பூங்கா –II (991.64 ச.அடி) மற்றும் சாலைகள் ஆகிய பொது உபயோக இடங்களை தானப்பத்திர எண். 1518, நாள். 16.05.2019 மற்றும் தானப்பத்திர எண். 1995, நாள். 26.06.2019 ன் மூலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து ஒப்படைப்பு செய்துள்ளார். எனவே மேற்படி அனுமதியற்ற மனைப்பிரிவில் அமையும் பொது உபயோக இடங்களை ஏற்று மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு:**

பூங்கா மற்றும் பொது உபயோக இடங்களை மனுதாரர் தானப்பத்திரத்தின் மூலம் பதிவு செய்து ஒப்படைப்பு செய்துள்ளதால் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.1903/2019/எப்1)

**தீர்மானம் எண். 3457 நாள். 28.06.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 11.</u>**

விருத்தாசலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 18ல் பூந்தோட்டம் நகராட்சி துவக்கப்பள்ளியில் மாணவர்களின் சேர்க்கை சதவிகிதம் அதிகரிக்கும் நோக்கத்துடனும் மாணவர்களின் நலன் கருதியும் பூந்தோட்டம் நகராட்சி துவக்கப்பள்ளியில் கூடுதல் பள்ளி கட்டிடம் முதல் தளம் இரண்டு வகுப்பு அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 9.95 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை கல்வி நிதியில் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3458 நாள். 28.06.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 12.</u>**

விருத்தாசலம் நகராட்சியில் பாராளுமன்ற தேர்தல் 2019–ஐ முன்னிட்டு அனைத்து வாக்குசாவடிகளிலும் மாற்றுதிறனாளிகள், முதியவர்கள் மற்றும் பொதுமக்களின் நலன் கருதி கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர்,கடலூர் அவர்களின் ஆய்வுகூட்டத்தில் தெரிவித்தற்கிணங்க தேர்தல் பணியின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் உள்ளூர் விலைப்புள்ளி கோரி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் மற்றும் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கி பணி நல்ல முறையில் முடிக்கப்பட்டு கீழ்கண்டவாறு பட்டியல் தொகை வழங்கியது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | பணி மேற்கொண்ட நிறுவனம் மற்றும் ஒப்பந்ததாரர் | பட்டியல் தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1. | நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு நான்கு வாக்குசாவடிகளில் சிண்டெக்ஸ் டேங்க் மற்றும் இரண்டு வாக்குாவடி அறையில் தடுப்பு அமைக்கும் பணி | ராசி & கோ,<br>50எப், ஜங்ஷன் ரோடு,<br>விருத்தாசலம். | 10900/– |
| 2. | நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு வாக்குசாவடிகளில் துணிபந்தல் ,சேர் மற்றும் டேபிள் வாடகைக்கு சப்ளை செய்யும் பணி | பழனிவேல் ஆடியோஸ் ,<br>வடக்கு கோட்டை வீதி,<br>விருத்தாசலம். | 33172/– |
| 3. | நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு | திரு.வி.ஆர்.மணிகண்டன், | 55000 /– |

| | | | |
|---|---|---|---|
| | வாக்குசாவடிகளுக்கு 10 எண்ணிக்கை சக்கர நாற்காலிகள் (Wheel Chair ) சப்ளை செய்யும் பணி | ஒப்பந்ததாரர், விருத்தாசலம். | |
| 4. | நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு அனைத்து வாக்குசாவடிகளிலும் 21 எண்ணிக்கை போகஸ் லைட் மற்றும் 49 எண்ணிக்கை டியூப்லைட் அமைக்கும் பணி | பழனிவேல் ஆடியோஸ் , வடக்கு கோட்டை வீதி, விருத்தாசலம். | 13300/— |
| 5. | நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு அனைத்து வாக்குசாவடிகளிலும் மின்ணணு வாக்குபதிவு இயந்திரம் பயன்படுத்துவதற்கு கூடுதலாக 65 எண்ணிக்கை Extension Box சப்ளை செய்யும் பணி | கிரேட் மார்கெட்டிங் ஏஜென்ஸிஸ், 41டி/2,பிருந்தாவன் நகர், ,ஜங்ஷன் ரோடு, விருத்தாசலம். | 40585/— |

**அலுவலக குறிப்பு:**

மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 3459 நாள். 28.06.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 12.**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நேரடி மின்மோட்டார்கள் இயக்க பொறியியல் பிரிவில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் 17 நபர்களை மாதம் ரூ.600/— ஊதியத்தில் விருத்தாம்பிகை மகளிர் சுயஉதவிக்குழு மூலம் டிசம்பர் 2019 வரை நியமித்து கொள்ள இந்நகரமன்ற தீர்மானம் எண்.3279,நாள்.31.12.2018ல் அனுமதி பெறப்பட்டுள்ளது.இந்நிலையில் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் புதியதாக போடப்பட்ட கீழ்கண்ட 9 இடங்களில் உள்ள நேரடி மின்மோட்டார்களை இயக்க போதிய ஆட்கள் இல்லாத காரணத்தினால் ஏற்கனவே உள்ள 17 நபர்களுடன் கூடுதலாக 9 நபர்களை மாதம் ரூ.600/— ஊதியத்தில் விருத்தாம்பிகை மகளிர் சுயஉதவிக்குழு மூலம் டிசம்பர் 2019 வரை நியமித்து கொள்ளவும்,அதற்கு ஏற்படும் தோராய செலவினம் ரூ.32400/— க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | மின் மோட்டார் அமைந்துள்ள இடம் |
|---|---|---|
| 1. | 15,16 | டிரைவர் காலணி,ராஜிவ்காந்தி நகர்,விவேகானந்தர் தெரு |
| 2. | 16 | பாலாஜி நகர், ராஜிவ்காந்தி தெரு |
| 3. | 16,17 | கூட்டுறவு நகர்,முத்துகுமாரசுவாமி நகர்,திருவள்ளுவர் நகர்,பூதாமூர் நகர் |
| 4. | 16 | MGR நகர் |
| 5. | 17 | தங்கம் நகர்,சிதம்பரம் ரோடு,EB எதிரில் |
| 6. | 12 | ஓம்சக்தி கோயில் அருகில் வீரபாண்டியன் தெரு,தென்றல் தெரு |
| 7. | 12 | முருகன் கோயில் அருகில் வடக்கு வீரபாண்டியன் தெரு |

| | | |
|---|---|---|
| 8. | 32 | சாவடிக்குப்பம் டோபிகானா அருகில் |
| 9. | 6 | வி.எண்.ஆர் நகர் |

**அலுவலக குறிப்பு:**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிருந்து மேற்கொள்ளலாம்.

(ந.க.எண். 6922/2017/இ2)

**தீர்மானம் எண். 3460 நாள். 28.06.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 13.**

விருத்தாசலம் நகராட்சியில் வார்டு எண் 9 அபுல்கலாம் ஆசாத் தெரு Direct மோட்டார் சர்வீஸ் ஒயர் பழுது அடைத்ததை முன்னிட்டு குடிநீர் பணியின் அவசரம் அவசியம் கருதியும் அப்பகுதி மக்களின் பொதுநலன் கருதியும் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் உள்ளூர் விலைப்புள்ளி கோரி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஜெயம் எலக்ட்ரிக்கல்ஸ்,27,ஜங்ஷன் ரோடு,விருத்தாசலம் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கி பணி நல்ல முறையில் முடிக்கப்பட்டு பட்டியல் தொகை ரூ.5120/— வழங்கியது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 3461 நாள். 28.06.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 14.**

விருத்தாசலம் நகராட்சியில் வார்டு எண். 18 பூதாமூர் பழைய காலணி மாரியம்மன் கோயில் தெரு 1.5 எச்.பி போர்வெல் பேன போர்டு பழுது அடைந்ததை முன்னிட்டு குடிநீர் பணியின் அவசரம் அவசியம் கருதியும் அப்பகுதி மக்களின் பொதுநலன் கருதியும் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் உள்ளூர் விலைப்புள்ளி கோரி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஜெயம் எலக்ட்ரிக்கல்ஸ், 27, ஜங்ஷன் ரோடு, விருத்தாசலம் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கி பணி நல்ல முறையில் முடிக்கப்பட்டு பட்டியல் தொகை ரூ. 5890/— வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 3462 நாள். 28.06.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 15.</u>**

விருத்தாசலம் நகராட்சியில் புதுப்பேட்டை நகராட்சி பள்ளி குடிநீர் மோட்டார் பேனர் போர்டு மற்றும் வார்டு எண். 13 அண்ணா நகர் OHT மோட்டார் ஸ்டார்டர் பழுது அடைந்ததை முன்னிட்டு குடிநீர் பணியின் அவசரம் அவசியம் கருதியும் அப்பகுதி மக்களின் பொதுநலன் கருதியும் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் உள்ளூர் விலைப்புள்ளி கோரி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஜெயம் எலக்ட்ரிக்கல்ஸ், 27, ஜங்ஷன் ரோடு, விருத்தாசலம் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கி பணி நல்ல முறையில் முடிக்கப்பட்டு பட்டியல் தொகை ரூ. 8630/– வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 3463 நாள். 28.06.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 16.</u>**

விருத்தாசலம் நகராட்சியில் வார்டு எண். 10 இளங்கோவடிகள் தெரு மற்றும் வார்டு எண். 12 சரஸ்வதி தெரு நேரடி மோட்டார் ஸ்டார்டர் பழுது அடைந்ததை முன்னிட்டு குடிநீர் பணியின் அவசரம் அவசியம் கருதியும் அப்பகுதி மக்களின் பொதுநலன் கருதியும் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் உள்ளூர் விலைப்புள்ளி கோரி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய கிரேட் மார்க்கெட்டிங், ஏஜென்சீஸ், 41டி/2, பிருந்தாவன் நகர் விருத்தாசலம் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கி பணி நல்ல முறையில் முடிக்கப்பட்டு பட்டியல் தொகை ரூ. 7315/– வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 3464 நாள். 28.06.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 19.</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தை அழகுபடுத்தும் திட்டம் முந்தைய நகர்மன்ற தீர்மானத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டு தீர்மானத்தில் நகராட்சி நிர்வாக ஆணையரின் நிர்வாக அனுமதியினை பெற்று உத்தரவு வழங்க தீர்மானிக்கப்பட்டதன் அடிப்படையில் பிரேரணை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் மூலம் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. தற்போது நிலுவையில் உள்ளது. இது குறித்து M/S. ரிஷி ஆட்ஸ் புரமோட்டர்ஸ் நிறுவனம் சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளனர் மேற்படி வழக்கிற்கான செலவினத் தொகைக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(ந.க.எண். 3189/19/எப்1)

**தீர்மானம் எண். 3465 நாள். 28.06.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 20.**

திடக்கழிவு மேலாண்மை திட்டம் – திடக்கழிவு மேலாண்மை மற்றும் கையாளுதல் விதிகள் 2016ன் படி இந்நகராட்சி கொள்கை மற்றும் செயல்திட்ட அறிக்கை தயார் செய்து மாவட்ட அரசிதழில் வெளியிடுவதற்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள 1 முதல் 36 பக்கங்கள் கொண்ட கொள்கை குறிப்பு அறிக்கையினை மன்றதின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. திடக்கழிவு மேலாண்மை மற்றும் கையாளுதல் விதிகள் 2016ன் படி செயல்திட்டம் மற்றும் கொள்கை குறிப்பு அரசிதழில் பிரசுரம் செய்ய ஆகும் செலவினத்தை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 804/17/எச்1)

**தீர்மானம் எண். 3466 நாள். 28.06.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 21.**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட விருத்தாசலம் கிராமம் ரீ. சர்வே எண்கள் 24/1pt,28/3,28/4pt,28/5pt,30/1,35/5,35/6 மற்றும் 35/7 ஆகியவற்றில் 6.33 ஏக்கர் அல்லது 275734.80 சதுரஅடி பரப்பளவு கொண்ட “ஸ்ரீ சக்தி நகர்” எனும் மனைப்பிரிவிற்கு அரசாணை எண். 78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை (UD(3) துறை, நாள். 04.05.2017 மற்றும் அரசாணை எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை (UD(3) துறை, நாள். 13.10.2017 மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை–2அவர்களின் செயல்முறை வழிகாட்டுதல் (Operational Guideliness) ந.க.எண். 13193/2017/எல்.ஏ2, நாள். 30.10.2017, 31.10.2017 மற்றும் 07.11.2017ன்படி மேற்படி மனைபிரிவிற்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர், விழுப்புரம் மண்டலம் அவர்கள் கொ.ஒ.ம.வ/ந.ஊ.உ.இ (வி.ம) எண். 51/2018 என எண்ணிட்டு நாள். 19.02.2018ல் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மனைபிரிவு உரிமையாளரான திரு. K. ரவி அவர்கள் மேற்படி மனைபிரிவில் ஒதுக்கப்பட்ட பூங்கா –I (4611.84 ச.அடி) பூங்கா –II (3892.24 ச.அடி) பூங்கா –III (6376.47 ச.அடி) பூங்கா –IV (5161.40 ச.அடி) மற்றும் சாலைகள் ஆகிய பொது உபயோக இடங்களை தானப்பத்திர எண். 966, நாள். 27.03.2019ன் மூலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து ஒப்படைப்பு செய்துள்ளார். எனவே மேற்படி அனுமதியற்ற மனைப்பிரிவினை வரண்முறைபடுத்தி மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு:**

பூங்கா மற்றும் பொது உபயோக இடங்களை மனுதாரர் தானப்பத்திரத்தின் மூலம் பதிவு செய்து ஒப்படைப்பு செய்துள்ளதால் மன்றம் வரண்முறைப்படுத்தி ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண். 2276/2018/எப்1)

**தீர்மானம் எண். 3467 நாள். 28.06.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 22.**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட விருத்தாசலம் கிராமம் ரீ. சர்வே எண்கள் 230/3, 230/7B, 233/2, 233/3A, 233/3 B, 233/4, 234, 235/1, 235/2, 235/3, 236/6, 236/7 மற்றும் 254 ஆகியவற்றில் 13.88 ஏக்கர் அல்லது 604612.79 சதுரஅடி பரப்பளவு கொண்ட பெயரிடப்படாத மனைப்பிரிவிற்கு அரசாணை எண். 78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை (UD(3) துறை, நாள். 04.05.2017 மற்றும் அரசாணை எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை (UD(3) துறை, நாள். 13.10.2017 மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை–2அவர்களின் செயல்முறை வழிகாட்டுதல் (Operational Guideliness) ந.க.எண். 13193/2017/எல்.ஏ2, நாள். 30.10.2017, 31.10.2017 மற்றும் 07.11.2017ன்படி மேற்படி மனைபிரிவிற்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர், விழுப்புரம் மண்டலம் அவர்கள் கொ.ஒ.ம.வ/ந.ஊ.உ.இ (வி.ம) எண். R 263/2019 என எண்ணிட்டு நாள். 14.03.2019ல் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மனைபிரிவு உரிமையாளரான திரு. C. சந்தோஷ்குமார் அவர்கள் மேற்படி மனைபிரிவில் ஒதுக்கப்பட்ட பூங்கா –17315.74 ச.அடி மற்றும் சாலைகள் ஆகிய பொது உபயோக இடங்களை தானபத்திர எண். 947, நாள். 22.03.2019ன் மூலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து ஒப்படைப்பு செய்துள்ளார். எனவே மேற்படி அனுமதியற்ற மனைப்பிரிவினை வரண்முறைபடுத்தி மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு:**

பூங்கா மற்றும் பொது உபயோக இடங்களை மனுதாரர் தானபத்திரத்தின் மூலம் பதிவு செய்து ஒப்படைப்பு செய்துள்ளதால் மன்றம் வரண்முறைப்படுத்தி ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண். 1318/2019/எப்1)

**தீர்மானம் எண். 3468 நாள். 28.06.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 23.**

விருத்தாசலம் நகராட்சியில் Sustainable water security mission (SuWaSeM) திட்டத்தின் கீழ் ரூ. 16.00 இலட்சம் மதிப்பீட்டில் (அரசு மான்யம் ரூ. 8.00 இலட்சம் பொது நிதி ரூ. 8.00 இலட்சம்) கீழ்கண்ட நான்கு குளங்களை தூர்வாரும்பணிக்கு திட்ட மதிப்பீடுதயார் செய்து செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், கடலூர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்நிலையில் தற்போது மழைகாலம் தொடங்கியுள்ளதால், மேற்படி குளங்களை உடன் தூர்வாரி மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு அமைக்கவேண்டியுள்ளதால், நிர்வாக அனுமதி பெறப்பட காலதாமதம் ஆகிவிடும் நிலையில் பணியின் அவசர அவசியம் கருதி நான்கு குளங்களை தூர்வாரும் பணிக்கு பொதுநிதியில் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொண்டு பட்டியல் தொகை வழங்கவும் மான்ய தொகை விடுவிக்கப்பட்டபின் மேற்படி தொகையினை பொது நிதியில் ஈடு செய்து கொள்ள மற்றும் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | தூர்வாரும் குளத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. |
|---|---|---|
| 1. | அம்மன் குளம் | 4.00 |
| 2. | நல்லேரி குளம் | 4.00 |
| 3. | தச்ச குளம் | 4.00 |
| 4. | செட்டி குளம் | 4.00 |

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2966/17/இ1)

**தீர்மானம் எண். 3469 நாள். 28.06.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 24.**

இந்நகராட்சியின் பொது சுகாதாரபிரிவில் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளை பிரித்து எடுத்து உரக்கழிவுகளை மூட்டையாக கட்டி சேமித்திட போரா சாக்குகள் வாங்குவதற்கும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி பெற்று (மன்ற தீர்மான எண். 3278, நாள். 31.12.2018) விலைப்புள்ளி கோரப்பட்டதில் 20.06.2019 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | எண்ணிக்கை | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | A. பாரதமணி, சாக்கு மண்டி கடை, கமிட்டி வளாகம், கடலூர் மெயின் ரோடு, விருத்தாசலம். | ஒன்று | 27/– |
| 2. | K. வெங்கடேசன் சாக்கு வியாபாரம், 207, கடலூர் ரோடு, விருத்தாசலம். | ஒன்று | 26/– |
| 3. | ஸ்ரீ காமாட்சி அம்மன் சாக்கு மண்டி, 79, கடலூர் ரோடு, விருத்தாசலம். | ஒன்று | 25/– |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண். 3ல் காணும் ஸ்ரீ காமாட்சி அம்மன் சாக்கு மண்டி, 79, கடலூர் ரோடு, விருத்தாசலம் அவர்கள் அளித்துள்ள குறைவான விலைப்புள்ளியை ஏற்கலாம்.

(ந.க.எண். 7189/19/எச்1)

**தீர்மானம் எண். 3470 நாள். 28.06.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 25.</u>**

விருத்தாசலம் நகராட்சி பொதுசுகாதார பிரிவின் கீழ் இயங்கி வரும் வாகனங்களுக்கு ஆண்டு தோறும் எடுக்கப்படும் இன்சூரன்ஸ், சாலை வரி, 1 சதவிகித வரி மற்றும் பசுமை வரி புதுப்பிப்பதற்கு 2019—20 ஆம் ஆண்டிற்கு செலுத்திடவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 5,00,000 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இப்பொருள் குறித்த செலவினத் தொகையினை 2019—20 ஆம் ஆண்டு பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
   (ந.க.எண். 4171/17/எச்1)

**தீர்மானம் எண். 3471 நாள். 28.06.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 26.</u>**

விருத்தாசலம் நகராட்சியின் 33 வார்டுகளிலும் குரங்குகள் கூட்டம் கூட்டமாக வந்து தொல்லைகள் தருவதாகவும், வீட்டினுள் புகுந்து பொருட்களை எடுத்து செல்வதாகவும், தண்ணீர் குழய்களில் உள்ள பைப்புகளை திறந்து விட்டு குடிநீரை சேதப்படுத்துகிறது எனவும், வீடுகளில் உள்ள குழந்தைகளை கடிக்கின்றது எனவும், அதனை விரட்டினால் அவை சீறி எங்களை அச்சுறுத்தி கடிக்க வருகின்றன எனவும் பொதுமக்கள் புகார்கள் தெரிவித்து வருகின்றனர். மேலும் பிள்ளைகள் பள்ளிகளுக்கு செல்ல சிரமமாகவும் உள்ளது எனவும், தொலைபேசி மூலமாக தெரிவித்து வருகின்றனர். எனவே பொது மக்கள் நலன் கருதி குரங்குகளை பிடித்து அப்புறப்படுத்திட ஆகும் தோராய செலவினம் ரூ. 2.00 இலட்சத்திற்கு மன்றத்தி அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மேற்கண்ட செலவினத்தை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 6208/13/எச்1)

**தீர்மானம் எண். 3472 நாள். 28.06.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 27.</u>**

விருத்தாசலம் நகராட்சியில் கல்வி நிதியின் கீழ் ரூ. 100000/— மதிப்பீட்டில் நகராட்சிக்கு சொந்தமான 12 பள்ளிகளில் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் (RO System) பழுது நீக்கும் பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண். 3403, நாள். 31.05.2019ல் அனுமதியளித்ததற்கிணங்க, 19.06.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டிதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | M/s New Aqua Enterprises,<br>27, Junction Road,<br>Vriddhachalam. | (–) 0.03 % குறைவு |
| 2. | M/s M.R. I Enterprises,<br>Cuddalore Road,<br>Vriddhachalam. | (+) 0.05 % அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1 ல் காணும் M/s New Aqua Enterprises, 27, Junction Road, Vriddhachalam அவர்கள் அளித்துள்ள 0.03 சதவிகிதம் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2857/19/இ1)

**தீர்மானம் எண். 3473 நாள். 28.06.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 28.</u>**

விருத்தாசலம் நகராட்சியில் வறட்சி நிவாரண நிதியின் கீழ் ரூ. 152000/– மதிப்பீட்டில் நகராட்சிக்குட்பட்ட வி.என்.ஆர் நகர், கல்லூரி நகர், புதுப்பேட்டை பள்ளி மற்றும் தீர்த்தமண்டப தெருவில் உள்ள போர்வெல் சுத்தம் (Flushing) செய்யும் பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண். 3391, நாள். 31.05.2019ல் அனுமதியளித்ததற்கிணங்க, 19.06.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டிதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | ராசி அண் கோ,<br>ஒப்பந்ததாரர், விருத்தாசலம். | (–) 0.02 % குறைவு |
| 2. | திரு. சிவகுருநாதன்,<br>ஒப்பந்ததாரர், விருத்தாசலம். | (+) 0.22 % அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1 ல் காணும் ராசி அண் கோ ஒப்பந்ததாரர் அவர்கள் அளித்துள்ள 0.02 சதவிகிதம் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2900/19/இ1)

**தீர்மானம் எண். 3474 நாள். 28.06.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 29.</u>**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 15 கடலூர் ரோடு ஸ்டேட் பாங்க் பேருந்து நிறுத்தம் அருகில் உள்ள உயர்மின் கோபுர விளக்கில் உள்ள 250 வாட்ஸ் LED விளக்குகளை மாற்றி அமைக்கும் பணிக்கு ஏற்படும் தோராய செலவினம் ரூ. 60000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3475 நாள். 28.06.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 30.</u>**

விருத்தாசலம் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2015–16 நிதியின் கீழ் ரூ. 15,80,000/– மதிப்பீட்டில் கல்லூரி நகர் OHT வளாகத்தில் மெஷினரி ஷெட் அமைக்கும் பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண். 3296, நாள். 31.12.2018ல் அனுமதியளித்ததற்கிணங்க, 19.03.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 29.05.2019 அன்று Price Bid திறக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | திரு. வி. ஆர். மணிகண்டன்,<br>ஒப்பந்ததாரர், விருத்தாசலம். | (+) 4.50 % அதிகம் |
| 2. | திரு. ஆர். ராதாகிருஷ்ணன்,<br>ஒப்பந்ததாரர், விருத்தாசலம். | (+) 9.73 % அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1 ல் காணும் திரு. வி. ஆர். மணிகண்டன், ஒப்பந்ததாரர் அவர்கள் அளித்துள்ள 4.50 சதவிகிதம் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 9519/15/இ1)

**தீர்மானம் எண். 3476 நாள். 28.06.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**